# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 26 திங்கட்கிழமை 10.03.2025 கதிர் 149







# யாழில் அநாகரிகமாக நடந்த யூடியூப்பர் விளக்கமறியலில்



யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ்ப்பாணத்தில் பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றின் வீட்டினுள் இரவு வேளை நுழைத்து அநாகரிகமாக நடந்து கொண்ட யூடியூப்பர் உள்ளிட்ட நால்வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ். பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் வறியவர்களுக்கு உதவி செய்வதாகப் புலம்பெயர் தமிழர்களிடம் நிதியைப் பெற்று, அதன் ஊடாக உதவி செய்வது போன்ற காணொளிகளைத் தனது யூடியூப் தளத்தில் பதிவேற்றி வந்துள்ளார்.

உதவி தேவைப்படுவோரிடம் நக்கல், நையாண்டியோடு பேசியே காணொளி எடுத்து அவர் பதிவிட்டு வந்துள்ளார். அதற்குப் பல்வேறு தரப்பினரிடம் இருந்தும் எதிர்ப்புக்கள் கிளம்பி வந்தன.

இந்நிலையில் , கடந்த சில தினங்களுக்கு முன்னர் தந்தையை இழந்து தாயின் அரவணைப் பில் வாழ்ந்து வரும் பாடசாலை மாணவி ஒருவரின் வீட்டுக்கு இரவு வேளை சென்ற மேற்படி நபர், மாணவியைக் காணொளி எடுக்க முற்பட்டுள்ளார். அதற்கு மாணவி மறுப்புத் தெரிவிக்கவே காணொளியில் நாகரிகமற்ற வார்த்தைகளைப் பயன்படுத்தியுள்ளார்.

குறித்த காணொளி சமூக வலைத்தளங்களில் பரவியதை அடுத்து பல்வேறு தரப்பினரும், தமது கண்டனங்களைத் தெரி வித்து இவ்வாறான செயற்பாடுக ளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், இவ்வாறு உதவி செய்பவர்களின் நிதி கையாடுகைகள் 7➤

# கொழும்பில் போட்டியிடுங்கள் தமிழரசுக்கு மனோ அழைப்பு

## எந்தப் பிரச்சினையும் இல்லை என்றும் அவர் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 10

"நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி நண்பர்கள் கொழும்பில் போட்டியிட்டால் எமக்கு எந்தப் பிரச்சினையும் ஏற்படப் போவதில்லை. அவர்கள் கொழும்பில் போட்டியிட வேண்டும்." - என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார். 7➤

# வடமராட்சியில் மயங்கி வீழ்ந்த உடற்கல்வி ஆசிரியர் மரணம்!



வடமராட்சி, மார்ச் 10

யாழ்ப்பாணம், வடமராட்சியில் திடீரென மயங்கி வீழ்ந்த ஆசிரியர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

நெல்லியடி மகா வித்தியாலய உடற்கல்வி ஆசிரியரான வடமராட்சி பகுதியைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் தணிகைவேல் (வயது 47) என்பவரே உயிரிழந்துள்ளார். வதிரியில் உள்ள தனது வீட்டில் நேற்று ஞாயிற்றுக் கிழமை 7➤

# ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி யாழில் மட்டும் கூட்டாகப் போட்டியாம்

## செல்வம் அடைக்கலநாதன் கூறுகின்றார்



மன்னார், மார்ச் 10

"உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதியில் மாத்திரம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சரவணபவன் மற்றும் சந்திரகுமார் ஆகியோரின் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடவுள்ளது. வடக்கு, கிழக்கில் ஏனைய இடங்களில் 7➤

# யாழ்ப்பாணத்தில் இருந்து இந்தியர்கள் நாடு கடத்தல்



யாழ்ப்பாணம், மார்ச் 10

நோய்களைக்குணப்படுத்துவதாக இந்தியாவில் இருந்து வருகை தந்து யாழ்ப்பாணம் - மாதகல் பகுதியில் தீவிர மதப் பிரசாரத்தில் ஈடுபட்ட குழுவினர் சுற்றுலா 7➤

# தேசபந்து தென்னக்கோன் ரிட் மனு



கொழும்பு, மார்ச் 10

முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் சட்டத்தரணிகள் ஊடாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

2023 ஆம் ஆண்டு மாத்தறை, வெலிகம, டபிள்யூ. 15 ஆவது விருந்தகத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாகத் தன்னைக் கைது செய்ய மாத்தறை நீதிவான் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை இடைநிறுத்தி இடைக் காலத் தடை உத்தரவைப் பிறப்பிக்குமாறு அந்த மனுவில் அவர் கோரியுள்ளார். 7➤

# புதிய கடவுச்சீட்டுக்காக 26,000 பேர் காத்திருப்பு!



கொழும்பு, மார்ச் 10

புதிய கடவுச்சீட்டுககாக 26,000இற்கும் மேற்பட்ட வெளிநாட்டிலுள்ள இலங்கையர்கள் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளதாக வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அருண் ஹேமசந்திர தெரிவித்துள்ளார்.

குறித்த விண்ணப்பங்கள் வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்கள் மற்றும் உயர்ஸ்தானிகராலயங்களால் பெறப்பட்டு சுமார் இரண்டு வருடங்கள் கடந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சிலரது வெளிநாட்டு கடவுச்சீட்டுகள் காலாவதியாகிவிட்டதால், அவர்கள் ஏராளமான பிரச்சினைகளை எதிர்கொள்வதாக பிரதி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் வெளிநாடுகளில் உள்ள தொழிலாளர்கள் மற்றும் மாணவர்கள் தங்கள் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்தப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வை வழங்குவதற்காக வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு மற்றும் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் இடையே கலந்துரையாடலும் இடம்பெற்றுள்ளது.

இருப்பினும், இந்த மாத இறுதிக்குள் குறித்த பிரச்சினையை முடிந்தவரை தீர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று கூறிய பிரதி அமைச்சர், தற்போதைய அரசாங்கம் இந்த நெருக்கடியை உருவாக்கவில்லை என்பதையும் வலியுறுத்தினார்.

மேலும், வெளிநாட்டு கடவுச்சீட்டுக்களை பெறுகின்ற போதிலும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பங்களிலும் இடைத்தரகர்களின் உதவியை நாட வேண்டாம் என்று பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

# உலகப் புகழ்பெற்ற பாடகர் ஆலோ பிளாக் இலங்கைக்கு விஜயம்!

உலகப் புகழ்பெற்ற அமெரிக்க பாடகர் எலோ பிளாக் இலங்கைக்கு மூன்று நாட்கள் விஜயம் மேற்கொண்டு இன்று காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

இலங்கையில் சுகாதாரத் துறையில் முதலீட்டுத் திட்டத்தைத் ஆரம்பிப்பது குறித்து கலந்துரையாடுவதற்காக அவர் இங்கு வருகை தந்துள்ளார்.

ஜனாதிபதியின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான சிரேஸ்ட ஆலோசகர், அமெரிக்காவின் ஹூஸ்டன் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கோமிகா உடுகம சூரியவின் அழைப்பின் பேரில் அவர் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

# SK Vlog யூடியூப்பருக்கு எதிராக சட்ட நடவடிக்கை!

கொழும்பு, மார்ச் 10

SK Vlog யூடியூப்பர் கிருஷ்ணா யாழ். இளவாலை காவல்துறையினரால் நேற்று கைது செய்யப்பட்டிருந்த நிலையில் இன்று நீதிமன்றத்தில் முற்படுத்த காவல்துறையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ளுமு ஏடழபு என்ற பெயரில் யூரியூப் சனல் ஒன்றினை நடாத்தி வருகின்ற கிருஷ்ணா உதவி செய்கின்ற காணொளிகளை பதிவேற்றம் செய்து வருகிறார்.

அவர் தனது தளத்தில் வெளியிட்ட காணொளி பதிவில் பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்றின் வீட்டுக்குள் உட்புகுந்து அங்குள்ள பெண் பிள்ளை ஒன்றை தேவையற்ற வார்த்தைகளை பயன்படுத்தி இழிவுபடுத்தி பேசயிருப்பது பலர் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தி சர்ச்சை எழுந்ததுடன், எதிர்ப்பையும் தெரிவித்து வந்திருந்தனர்.

இளவாலை காவல்துறை பிரிவிற்குட்பட்ட பண்டத்தரிப்பு பகுதியில் உள்ள பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்றின் வீட்டுக்குள்ளேயே இவ்வாறு அத்துமறி உள் நுழைந்து குறித்த காணொளியை பதிவு செய்துள்ளார்.

இந்த நிலையில் குறித்த யூடியூப்பர் நேற்றைய தினம் அந்த வீட்டுக்கு மீண்டும் செல்ல முயன்ற வேளை பண்டத்தரிப்பு சில்லையூர் மத்தி இளைஞர்களால் மடக்கி பிடிக்கப்பட்டு இளவாலை காவல்துறையிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இதன்போது அவருடன் இன்னும் மூன்றுபேர் என மொத்தமாக நால்வர் காவல்துறையிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட இளவாலை காவல்துறையினர் பாதிக்கப்பட்ட குடும்பத்தின் வாக்கு மூலம், ஊர் இளைஞர்களின் வாக்குமூலத்தை பெற்று அதன்பின்னர் நால்வரும் கைது செய்யப்பட்டனர்.

வற்புறுத்தல், அத்துமீறி வீட்டினுள் உட்புகுதல், தகாத வார்த்தை பிரயோகம் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில கைது செய்யப்பட்ட நால்வரையும் இன்றையதினம் நீதிமன்றத்தில் முற்படுத்த காவல்துறையினர் நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிமை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவனற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# தனித்தும் ,இணைந்தும் போட்டி







கொழும்பு, மார்ச் 10

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சில மன்றங்களில் தனித்தும், ,ன்னும் சில மன்றங்களில் ,ணைந்தும் போட்டியிடுவதற்கு மலையக மக்கள் முன்னணி தீர்மானித்துள்ளதாக முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே. ,ராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

ஏனைய உள்ளூராட்சி மன்றங்களில், தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஐக்கிய மக்கள் சக்தி ஆகியவற்றுடன் ,ணைந்து போட்டியிட முன்னணி முடிவு செய்யப்பட்டுள்ளது என்றார்.

மலையக மக்கள் முன்னணியின் மகளிர் தினக் கொண்டாட்டம் ஹட்டனில் உள்ள அதன் அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை (09) நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். பதுளை, ,ரத்தினபுரி உள்ளிட்ட பல மாவட்டங்களில் தனது கட்சி தனித்து போட்டியிட முடிவு செய்துள்ளதாக கூறிய அவர், எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பல உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தை மலையக மக்கள் முன்னணி கைப்பற்றும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார். (ஐ)

# வழமைக்கு திரும்பியது மலையக ரயில் சேவை



கொழும்பு, மார்ச் 10

பதுளையிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கிச் செல்லும் விசேட விரைவு ரயில் போக்குவரத்து, திங்கட்கிழமை (10) காலையுடன் இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

பதுளையிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கிச் செல்லும் 1008ஆம் இலக்க விசேட விரைவு ரயில், கம்பளை மற்றும் உலப்பனை ரயில் நிலையங்களுக்கு இடையில் ஞாயிற்றுக்கிழமை (9) பிற்பகல் தடம்புரண்டதால், மலையக ரயில் பாதையில் பதுளை-கொழும்பு கோட்டை ரயில் சேவை பாதிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்திருந்தது.


இந்த நிலையில், திங்கட்கிழமை காலையுடன் இயல்பு நிலைக்கு திரும் பியுள்ளதாக தெரிவித்துள்ளது.

ரயில்வே அதிகாரிகளின் கூற்றுப்படி, தடம் புரண்ட ரயிலின் இயந்திரம் சுமார் 270 அடி முன்னோக்கி நகர்ந்து, மலைச்சரிவில் மோதி நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தால்ரயில்தண்டவாளங்களுக்கும் குறிப்பிடத்தக்க சேதம் ஏற்பட்டதாக ரயில்வே கட்டுப்பாட்டு அறை அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

அதே நேரத்தில், பதுளையில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த இரவு நேர அஞ்சல் ரயில் நாவலப்பிட்டி ரயில் நிலையத்தில் இன்று காலை வரை நிறுத்தப்பட்டிருந்தாக கூறப்படுகின்றது.

# இந்த ஆண்டு 4,700 தோட்ட வீடுகள் நிர்மாணிக்கப்படும்



கொழும்பு, மார்ச் 10

இந்திய உதவித் திட்டத்தின் கீழ், இந்த ஆண்டு 4,700 பெருந்தோட்ட வீடுகள் நிர்மாணிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்தார்.

10,000 வீடுகள் கட்டும் திட்டத்தின் ஒரு பகுதியாக தோட்டப்பகுதி வீடுகள் கட்டப்படும் என்று அமைச்சர் வித்யாரத்ன தெரிவித்தார்.

வீட்டுவசதி பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதில் அரசியல் சார்பு இருப்பதாக முன்னர் செய்திகள் வந்தாலும், இந்த முறை, இந்த செயல்முறை அதிக வெளிப்படைத்தன்மையுடனும் அரசியல் சார்பு இல்லாமலும் நடத்தப்படும் என்று அவர் வலியுறுத்தினார்.

நிலச்சரிவு ஏற்படக்கூடிய பகுதிகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று அமைச்சர் கூறினார்.

எஸ்டேட் வீட்டுவசதி மேம்பாடு மற்றும் தொடர்புடைய உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக உள்நாட்டு நிதியில் ரூ.1.3 பில்லியன் ஒதுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

அண்மையில் பாராளுமன்றத்தில் அவரது தலைமையில் நடைபெற்ற பெருந்தோட்டத்துறை மற்றும் சமூக உள்கட்டமைப்பு தொடர்பான அமைச்சர்கள் ஆலோசனைக் குழுக் கூட்டத்தின் போது அவர் இந்தக் கருத்துக்களை தெரிவித்தார். (ஐ)

# மீண்டும் ஒருமுறை தொடங்கவுள்ளேன்

கொழும்பு, மார்ச் 10

நாயகர் சமல் ராஜபக்ஷ, ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன (SLPP) கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி, ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் இருந்து உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சமல் ராஜபக்ஷ, ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் போட்டியிட இளம் வேட்பாளர்களை பெருமளவில் முன்னிறுத்த திட்டமிட்டுள்ளதாகக் கூறினார்.

SLPP வேட்பாளர்களில் பெண்கள் மற்றும் தன்னைப் போன்ற மூத்த நபர்களும் அடங்குவர் என்று அவர் மேலும் கூறினார்.

அரசியலில்ஒருவர்மேலேயோ கீழேயோ இருக்க முடியும் என்று கூறிய சமல் ராஜபக்ஷ, மீண்டும் ஒருமுறை கீழிருந்து தொடங்கப் போவதாகக் கூறினார்.

இருப்பினும், முன்னாள் சபாநாயகர் எந்த உள்ளாட்சி சபைக்கு போட்டியிடப் போகிறார் என்பதை வெளியிடவில்லை. (ஐ)



# மன்னர் என நினைத்து செயல்படும் தர்மேந்திர பிரதான்: முதல்வர் ஸ்டாலின் காட்டம்!



தன்னை மன்னரென எண்ணிக்கொண்டு ஆணவத்துடன் பேசும் மத்திய கல்வித் துறை அமைச்சருக்கு நாவடக்கம் வேண்டும்' என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கல்வி நிதி விவகாரத்தில் மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கும், தி.மு.க., எம்.பி.,க்களுக்கும் கடும் விவாதம் நடந்தது. மத்திய அமைச்சர் பேசியது, வேதனை அளித்ததாக தி.மு.க., எம்.பி., கனிமொழி புகார் கூறினார். இதையடுத்து, தான் பேசியது புண்படுத்தியிருந்தால் அதை வாபஸ் பெற்றுக் கொள்வதாக தர்மேந்திர பிரதான் தெரிவித்தார்.

கல்வி நிதி விவகாரத்தில் கனிமொழி புகார் பேசியதை வாபஸ் பெற்றார் மத்திய அமைச்சர்!

இது குறித்து முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட அறிக்கை: தன்னை மன்னரென எண்ணிக் கொண்டு ஆணவத்துடன் பேசும் மத்திய கல்வித் துறை அமைச்சருக்கு நாவடக்கம் வேண்டும். தமிழகத்தின் நிதியைத் தராமல் ஏமாற்றும் நீங்கள், தமிழக எம்.பி.க்களைப் பார்த்து அநாகரிக மானவர்கள் என்பதா?

தமிழக மக்களை அவமானப்படுத்துகிறீர்கள். பிரதமர் மோடி இதனை ஏற்கிறாரா? நேீ, மும்மொழிக் கொள்கையைத் தமிழக அரசு அனுப்பிய ீஆ ளுஉசுஐ ஆழரு முற்றிலுமாக நிராகரித்து விட்டது என எனக்குக் கடிதம் எழுதியது நீங்கள் தானே? பிரதான் அவர்களே, நாங்கள் மக்களின் எண்ணங்களுக்கு மட்டுமே மதிப்பளித்துச் செயல்படுகிறோம்! உங்களைப் போல நாக்பூரின் சொற்களுக்குக் கட்டுப்பட்டு அல்ல.

நாங்கள் உங்கள் திட்டத்தைச் செயல்படுத்த முன்வரவும் இல்லை, அப்படி முன்வராத என்னை யாரும் வற்புறுத்தவும் முடியாது. தமிழக மாணவர்களுக்குரிய நிதியை, எங்களிடம் இருந்து வசூல் செய்த வரியை விடுவிக்க முடியுமா முடியாதா என்பதற்கு மட்டும் பதில் கூறுங்கள். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார். (ஐ)



# பஞ்சாபில் சர்வதேச போதை கடத்தல் மன்னன் கைது!

சர்வதேச போதைப் பொருள் கடத்தல் மன்னன் செஹனாஷ் சிங்கை பஞ்சாப் போலீசார் கைது செய்தனர்.

அமெரிக்காவின் எப்.பி.ஐ., பொலிஸாரால் தேடப்படும் சர்வதேச போதைப் பொருள் கடத்தல் மன்னன் செஹனாஷ் சிங், கொலம்பியாவில் இருந்து அமெரிக்கா மற்றும் கனடா நாடுகளுக்கு கொகைன் என்ற போதைப் பொருள் கடத்துவதை வாடிக்கையாகக் கொண்டுள்ளான்.

கடந்த மாதம் 26ம் தேதி, அமெரிக்காவில் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டிருந்த செஹனாஷின் கூட்டாளிகளான, அம்ரித் பால் சிங், தக்திர் சிங், சர்ப்சித் சிங், பெர்னான்டோ வல்லதரேஸ் ஆகிய 4 பேரை அமெரிக்கா போலீசார் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து 391 கிலோ மெத்தம்பெட்டமைனும், 109 கிலோ கொகைன் மற்றும் 4 ஆயுதங்களை அவர்களின் வீடுகளில் பறிமுதல் செய்தனர். இந்த சூழலில் கடத்தல் மன்னன் செஹனாஷ் சிங் இந்தியாவுக்கு தப்பியோடி வந்து, தலைமறைவாகினான்.

அவன் இருப்பிடம் பற்றி தகவல் கிடைத்த பஞ்சாப் மாநில போலீசார் சுற்றி வளைத்து கைது செய்தனர். தொடந்து, அவனிடம் விசாரித்து வருகின்றனர். அவன் மீது பல்வேறு நாடுகளில் வழக்குகள் இருப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது. (ஐ)



# 3 பேர் கொல்லப்பட்ட நிலையில் 2 இளம் சிறார் மாயம்... ஜம்மு காஷ்மீரில் பரபரப்பு

கதுவர் ஜம்மு காஷ்மீரில் 3 பேர் கொல்லப்பட்ட நிலையில், இரு இளம் சிறார் மாயமாகியுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை உருவாக்கியுள்ளது.

கடந்த 5ம் தேதி யோகேஷ் சிங், 32, தர்ஷன் சிங்,40 மற்றும் வருண் சிங்,15 ஆகிய 3 பேர் லோஹை மல்ஹார் பகுதியில் நடக்கும் திருமணத்திற்காக சென்று கொண்டிருந்த போது, மூவரும் காணாமல் போகினர். இதையடுத்து, 8ம் தேதி மூவரும் சடலமாக பாதுகாப்பு படையினரால் மீட்கப்பட்டனர்.

ஜம்மு - காஷ்மீரில் மூவர் கொலை மத்திய அமைச்சர் குற்றச்சாட்டு

3 பேரையும் தீவிரவாதிகள் கொடூரமாக கொலை செய்துள்ளதாகக் கூறிய மத்திய அமைச்சர் ஜிதேந்திரா சிங், அமைதியை சீர்குலைக்க சதி நடப்பதாகவும் அவர் குற்றம்சாட்டியிருந்தார். மேலும், இதுபோன்ற சம்பவம் மீண்டும் நடக்காது என்றும் உறுதிய ளித்தார்.

இதனிடையே, ஜம்மு காஷ்மீரில் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், அங்கு பதற்றமான சூழல் நிலவி வருகிறது. இந்த நிலையில், இளம் சிறார்கள் இருவர் மாயமாகி இருப்பது அப்பகுதியில் மேலும் பதற்றத்தை உண்டாக்கியுள்ளது.

3 கொலைகள் நடந்த இரு தினங்களுக்குப் பிறகு, முகமது தீன், ரெஹ்மன் அலி ஆகிய இரு இளம் சிறார்கள் காணாமல் போயுள்ளனர். கடைசியாக ராஜ்பக் பகுதியில் இருந்த அவர்கள், திடீரென மாயமாகியுள்ளனர். அவர்களை அதிகாரிகள் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர். (ஐ)

# லாரி– சரக்கு வாகனம் மோதிய விபத்தில் 7 பேர் பலி ம.பி.,யில் சோகம்





மத்திய பிரதேசத்தில் இன்று அதிகாலை லாரியும், சரக்கு வாகனமும் மோதிய விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர்.

சித்தி மாவட்டத்தில் இருந்து பஹ்ரியை நோக்கி லாரி ஒன்று சென்று கொண்டிருந்தது. அதேபோல, மைஹாரை நோக்கி சரக்கு வாகனத்தில் குடும்பத்தினர் சென்று கொண்டிருந்தனர். இன்று அதிகாலை 2.30 மணியளவில் லாரியும், சரக்கு வாகனமுமம் மோதிக்கொண்டன. இதில், 7 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் 14 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த விபத்தை ஏற்படுத்திய டிரைவரை கைது செய்து விசாரணை நடத்தி வருவதாக டி.எஸ்.பி., காயத்ரி திவாரி தெரிவித்துள்ளார். (ஐ)

# உடைக்குள் சிறைவைக்கப்பட்ட உடலின் நிர்வாணக் குரல்!





பெண்களது நிர்வாணப் புகைப்படங்களைஃ வீடியோக்களை வைத்துக் கொண்டு மிரட்டி சம்பந்தப்பட்ட பெண்களிடம் பணம்ஃநகை பறிப்பது கட்டாயப்படுத்தி பாலியல் வல்லுறவு கொள்வது சம்பந்தப்பட்ட பெண்ணின் தோழிகளை இழுத்து வரச் செய்து மோசடி செய்வது போன்ற கொடுஞ்செயல்களில் ஆண்கள் ஈடுபட்டு-வருவதை, தொடர்ந்து பார்க்க முடிகின்றது.

பெண்களுடைய புகைப்படங்களை நிர்வாணப் புகைப்படங்களாக மார்ஃபிங் செய்து மிரட்டும் ஆண்களிடம், அப்பாவிப் பெண்கள் அடிபணிந்து கிடக்க வேண்டிய சூழல் இங்கு நிலவுகின்றது. இதுபோன்ற பிரச்சினையில் சிக்கியுள்ள பெண்கள் பிரச்சினையை குடும்பத்தோடு பகிர்ந்து கொண்டால் குடும்பத்தினர் அப்பெண்களை ஆறுதல்படுத்தி துணைநிற்க வேண்டும்.

ஆனால் நம் ஊர்க் குடும்பங்கள் பாதிக்கப்பட்ட பெண்ணை ஆற்றுப்படுத்தி ஆதரவாக நிற்காமல், பிரச்சினை பெரிதாவதற்குள் எல்லாவற்றையும் ஏதோ ஒரு வகையில் மேலோட்டமாக சரிசெய்துவிட்டு, உடனுக்குடன் பாதிக்கப்பட்ட பெண்ணின் படிப்பைஃபணியை பாதியில் நிறுத்தி திருமணம் செய்து வைத்துவிடுகின்றன.

எல்லாவற்றையும் அறிந்து திருமணம் செய்து கொள்ளும் ஆண்கள் எதிர்காலத்தில் அப்பெண்ணை, " அப்பவே நீ அப்படித்தான? நீ யோக்கியமாக இருந்-தால் நிர்வாணப் புகைப்படம் எப்படி அவனுக்குக் கிடைத்திருக்கும்?", என்று கூறி வாழ்நாள் முழுக்க உளவியல் தொல்லை கொடுத்து கொடுமைப்படுத்த வழிவகை செய்துவைக்கின்றன. இணையதளங்களில் நிர்வாணப் புகைப்படங்கள் வெளியாகும் பட்சத்தில், "இது என்னுடைய புகைப்படமன்று", என்று பாதிக்கப்பட்ட பெண்கள் மறுப்புத் தெரிவிப்பதற்குக்கூட இடமளிக்காமல் குடும்ப உறவுகள், " அய்யோ குடும்ப மானத்தை போக்கடிச்சிட்டாளே! கௌரவம் போச்சே", என்று புலம்பத் தொடங்கிவிடுவார்கள்.

குடும்பம் தன்னோடு நிற்காது, தனக்கான ஆறுதலையோ நீதியையோ தராது என்ற நிலையை உணர்ந்து கொள்ளும் பெண்கள், நிர்வாணப் புகைப்படங்களை வெளியிட்டு விடுவேன் என மிரட்டும் ஆண்களிடமிருந்து தங்களை விடுவித்துக்கொள்ள, தற்கொலை செய்து கொள்கின்றனர்.

பெண்களை மிரட்டுவதற்கு ஆண்கள் பெண்களின் உடலையே கருவியாகயாகப் பயன்படுத்திக்கொள்கினறனர். பெண்களின் உடல் பெண்களுக்கே சுமையாக்கப்பட்டுள்ளது. புராணங்கள், தொன்மங்கள் போன்றவை பெண்ணுடலை கீழானதாகவும், தீட்டுக்குரியதாகவும் ஏற்கனவே கட்டமைத்து வைத்திருக்கின்றன.

சமூகத்தின் வாயிலாகவும், பற்றாக்குறையான உணவுப் பழங்கங்களாலும் தங்கள் உடலை பல வீனமானதாகப் பெண்கள் உணர்கிறார்கள். நிர்வாணப் புகைப்படங்களை வைத்து மிரட்டும் ஆண்களின் ஆதிக்க உணர்வுகளைக் கண்டிக்காத சமூகத்தில், தன்னை பலவீனமாக உணரும் பெண்கள், பெண்ணாகப் பிறந்ததையே சாபமெனக் கருதும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

போர்னோகிராஃபி படங்களில் நிர்வாணமாக நடிக்கும் பெண்களை கொச்சைப்படுத்தி வசைபாடும் சமூகம், நிர்வாணமாக நடிக்கும் ஆண்கள் குறித்து வாய்திறப்பதில்லை.

நிர்வாணமாக நடிக்கும் ஆண்களை நோக்கி, "என்ன மனுசன்டா, வாழ்றான் பாரு, கொடுத்து வச்சவன், உடம்பெல்லாம் மச்சம் இருக்கும் போல", என்ற பெருமிதக் கருத்துக்களையே பெரும்பாலும் முன்வைக்கின்றது. ஆனால் பெண்களை, காசுக்காக உடலை விற்கக்கூடியவர்களென்று வாய்ப்புக்கிடைக்கும் போதெல்லாம் கொச்சைப்படுத்திவிடுகின்றது.

பாலியல் தொழிலாளர்களையும் சமூகம் இதே கண்ணோட்டத்தோடுதான் அணுகுகின்றது. காசுக்காக வெட்கமே இல்லாமல் உடம்பை விற்கிறவர்களென்று பெண் பாலியல் தொழிலாளர்களை இழிவுபடுத்துகிறது. அதே சமயம், கிகோலோ போன்ற தளங்களில் பாலியல் தொழிலாளர்களாகப் பதிவு செய்து இயங்கும் ஆண்களைக் கண்டுகொள்வதில்லை. மாறாக ஆண் பாலியல் தொழிலாளரை நாடும் பெண்களை நோக்கி, "கையில பணம் வந்திட்டா பொம்பளைங்க என்ன வேணாலும் பண்ணுவாங்க, ரொம்ப மோசமானவங்க", என்று இழிவுபடுத்துகின்றது.

முழுமையாக மூடியிருந்தாலும், நிர்வாணமாக இருந்தாலும், எப்படி இருந்தாலும், பெண்ணுடல் ஆண்களின் காமத்தை தூண்டக்கூடியது என்ற மூட நம்பிக்கையை ஆண்வயப்பட்ட சமூகம் போலியாக கட்டமைத்து வைக்கின்றது.

> பெண்களுடைய புகைப் படங்களை நிர்வாணப் புகைப்படங்களாக மார்ஃ பிங் செய்து மிரட்டும் ஆண்களி டம், அப்பா விப் பெண்கள் அடிபணிந்து கிடக்க வேண்டிய சூழல் இங்கு நிலவுகின்றது. இதுபோன்ற பிரச்சினையில் சிக்கியுள்ள பெண்கள் பிரச்சினையை குடும்பத் தோடு பகிர்ந்து கொண் டால் குடும்பத்தினர் அப்பெ-ண்களை ஆறுதல்படுத்தி துணைநிற்க வேண்டும்.

அதன் பொருட்டே ஆண்கள் வயது வேறுபாடின்றி, உடை வேறுபாடின்றி டயப்பர் அணிந்த பச்சிளம் பெண் குழந்தை முதல் முழுதும் மூடியபடி உடையணிந்திருக்கும் பெண் வரை அத்துமீறுகின்றனர். "அரைகுறை ஆடை-யைப் பார்த்தால் ஆண் கிளர்ச்சியுற்று அத்துமீறத்தான் செய்வான் இது ஆணின் பிறவி குணம், இதுதான் இயற்கை, அறிவியல்.." என்று ஆண்களின் அத்துமீறல்களுக்கு அறிவியலை அழைத்து வந்து தெருவில் விடுவது நகைச்சுவையின் உச்சம் எனலாம். அத்துமீறுவதை தந்தைமைய சமூகம் தொடங்கி, அங்கீகரித்து, இயல்பாக்கியிருக்கின்றதே ஒழிய பெண்ணுடலை பார்த்தால் ஆண் அத்துமீறுவான் என்பது இயற்கையின் விதியல்ல. மேலும் இது அறிவியல் உண்மையும் கிடையாது. ஆதிக்க உளவியலால் ஆண்கள் செய்யும் அராஜக நடத்தைகளின் வெளிப்பாடே ஆகும்.

அதிகாலை எழுந்து உணவு சமைப்பது, துவைப்பது, துப்புரவு செய்வது போன்ற குடும்பத்தின் அன்றாடப் பணிகளில் பங்கெடுப்பது பெற்றெடுக்கும் குழந்தையைக் குளிப்பாட்டுவது, மலம் கழித்தபின் கழு விவிடுவது, சீராட்டி தாலாட்டி, சோறூட்டி உறங்க வைப்பது போன்ற குழந்தை வளர்ப்பு பணிகளில் பங்களிப்பது வயது முதிர்ந்த குடும்ப உறவினர்களை (பாட்டி, தாத்தா, அம்மா அப்பா) பராமரிப்பதில் பங்கெடுத்துக்கொள்வது முதுமையில் தவிக்கும் அம்மா மற்றும் பாட்டிமார்களைக் குளிப்பாட்டுவது உடல் காயங்களுக்கு மருந்து போடுவது மருந்துகள் கொடுப்பது போன்ற பணிகளனைத்திலும் ஆண்கள் பங்கெடுக்கின்ற போது, பெண்ணுடலைப் பார்த்தாலே ஆண்களுக்கு காமம் வழிந்தோடும் என்ற சமூகத்தின் பொதுபுத்தி தவறானது என்பதை ஆண்களால் உணர முடியும்.

குழந்தைப்பராமரிப்பைப்போலவே வயதானவர்களைப் பார்த்துக்கொள்வதும், பெண்களுக்கே உரிய கடமையாக இருந்து வருகின்றது. இது சமநிலையடைந்த வயது முதிர்ந்த அல்லது நோய்வாய்ப்பட்ட பெண்களுக்கு மகன்கள்ஃபேரன்கள் பணிவிடை செய்வது என்பது பரவலாக்கப்படும் போதும், அக்காக்கள் தம்பிமார்களை நீராட்டி சீராட்டி வளர்ப்பது போல் அண்ணன்மார்கள் தங்கைகளை நீராட்டி சீராட்டி வளர்ப்பது விரிவாக்கபடுகின்ற போதும், ஆண்களுக்கே உரிய பொதுப்-பார்வைகள் மாற்றமடையும். பெண்ணுடல் மீதான ஆண்களின் காமவெறிப் பார்வை திருத்தமடைந்து இயல்பான ஒன்றாகக்கூடும்.

பெண் நிர்வாணமாகவே இருந்தாலும், இல்லாவிட்டாலும் அவள் அனுமதியின்றி அவளைத் தொடுவ-தும் புணர்வதும் தவறு. அப்படிச் செய்வது மனிதத் தன்மையற்ற செயல். 'ஆண்களே வந்து புணர்ந்து செல்லுங்கள்', என்று உணர்த்த பெண்கள் சுதந்திர உடைகளைத் தேர்ந்தெடுப்பதில்லை. பெண்களின் ஆடை சுதந்திரம் என்பது அவர்களுடைய தனிப்பட்ட வசதியையும், தட்பவெப்ப சூழலையும் உள்ளடக்கிய உடைத் தேர்வாகும் என்பதை சமூகம் உணர்ந்து நாகரீகத்துடன் நடந்துகொள்ளப் பழக வேண்டும்.

வெளியில் சென்று வரும் அல்லது அலுவலகத்திற்கு சென்று வீடு திரும்பும் ஆண்கள் வீட்டில் நுழைந்தவுடனேயே, மேலுடுப்புகளை கழற்றி எறிந்து தங்களை ஆசுவாசப்படுத்திக்கொள்வது போல், பெண்களை சுதந்திரமாக ஆசுவாசப்படுத்திக் கொள்ள வீடுகள் அனுமதிப்பதில்லை. குடும்பங்கள் பெண்களுக்கென வீடுகளுக்குள்ளான நிறைய வரைமுறைகளை வகுத்து வைத்திருக்கின்றன.

இது போன்ற வரைமுறைகளனைத்தும் பெண்களை காமக் கண்களால் வன்புணரும் ஆண்களை சமூகம் வீட்டிற்குள்ளேயே அண்ணனாகவும், அப்பாவாகவும், தம்பியாகவும், மகனாகவும், மாமனாராகவும் வளர்த்து வைத்திருக்கின்றது என்பதைத்தான் வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன. பெற்ற தகப்பனாலேயே பாலியல் வன்முறைக்குள்ளாகும் சிறுமிகள் குறித்து வரும் செய்திகள் இவற்றை உறுதிபடுத்துகின்றன.

வீட்டின் அன்றாடப் பணிகளை ஆற்றுவது பெண்களுக்கே உரிய கடமையென குடும்பங்கள் கட்டாயப்படு-த்தி வழிவழியாக வலியுறுத்துவதால், ஆண்கள் வீட்டுப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக்கொள்வதில்லை. தமிழ்நாட்டின் வெப்பச் சூழலில் அறை வெப்பநிலையை விடக்கூடுதலான வெப்பம் பரப்பும் சமையலறையில் இறுக்கமான மற்றும் கூடுதலான உடைகளை அணிந்து ஒட்டு மொத்தக் குடும்பத்துக்கும் சமைக்கும் பெண்களின் உடலுக்கான விடுதலையை, உடையிடமும் உளவியல் விடுதலையை சமையலறையிடமுமா கேட்க முடியும்?

குடும்பங்களும் அவற்றின் குப்பை வரைமுறைகளும்தான் திருத்தப்பட வேண்டும்.

நமது நாட்டுக் குடும்பங்கள் அன்பின் அடையாளங்களென ஊர்ப் பெருமை பேசுபவர்கள் ஒன்றை உணர வேண்டும். நமது குடும்பங்கள் ஆணாதிக்கத்-தால் அஸ்திவாரமிடப்பட்டு, சாதியாலும், மதத்தாலும்



# ரஷ்யா ஏவுகணை தாக்குதல் உக்ரைனில் 23 பேர் பலி

போர் நிறுத்த பேச்சு நின்ற நிலையில், ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதலால், உக்ரைனில் 23 பேர் உயிரிழந்தனர்.

கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைன் மீது, ரஷ்யா 2022ல் போரை துவக்கியது. மூன்று ஆண்டுகளை கடந்த நிலையில், இந்த போரை நிறுத்துவதற்கு அமெரிக்கா முயற்சி மேற்கொண்டது.

அமெரிக்க அதிபர்மற்றும்துணை அதிபர்ஜே.டி.வான்ஸ் உடன் உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலன்ஸ்கி சமீபத்தில் பேச்சு நடத்தினார். அதில் காரசார வாக்குவாதம் ஏற்பட்டு, உக்ரைன் அதிபர் வெளியேறினார்.

இதைத் தொடர்ந்து, போரை நிறுத்தும் முயற்சியை அமெரிக்கா தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது. மேலும், உக்ரைனுக்கு வழங்கி வந்த ராணுவ மற்றும் கடன் உதவிகளையும் அமெரிக்கா நிறுத்தியது.

உக்ரைனுடன் போர் நிறுத்தம் ரஷ்ய அதிபர் புடின் நிபந்தனை

இந்நிலையில், உக்ரைனின் பல்வேறு இடங்களில், ரஷ்யா தொடர்ந்து இரண்டாவது நாளாக நேற்று முன்தினம் ஏவுகணை தாக்குதல்களை தீவிரமாக்கியது.

குறிப்பாக டொனட்ஸ்க் பிராந்தியத்தில் உள்ள டோப்ரபிலியாவை நோக்கி தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இதில், 23 பேர் கொல்லப்பட்டதாகவும், 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ராணுவ, பொருளாதார உதவிகளை நிறுத்திய அமெரிக்கா, உக்ரைனுக்கு வழங்கி வந்த சாட்டிலைட் தகவல் பரிமாற்றத்தையும் நிறுத்திஉள்ளது.

இது உக்ரைனின் நிலையை மேலும் மோசமாக்கியுள்ளது. (ஐ)

# கனடா புதிய பிரதமர் ஆகிறார் மார்க் கார்னி



கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ விலகலை தொடர்ந்து, கனடாவின் புதிய பிரதமராக மார்க் கார்னி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

கனடாவின் புதிய பிரதமராக இருந்த ஜஸ்டின் ட்ரூடோ கடந்த ஜனவரி 7ம் தேதி தனது பதவியை ராஜினாமா செய்தார். இந்நிலையில், லிபரல் கட்சியின் தலைவராக தேர்வாகி உள்ள மார்க் கார்னி கனடாவின் 24வது பிரதமராக பதவியேற்கிறார்.

கனடாவில் இந்தாண்டு அக்டோபர் மாதம் பொதுத்தேர்தல் நடைபெற உள்ளது. அதுவரை பிரதமராக மார்க் கார்னி நீடிப்பார். லிபரல் கட்சித் தலைவரான சச்சித் மெஹ்ரா, லிபரல் கட்சியின் தலைமைப் பதவிக்கான போட்டியில் முன்னாள் மத்திய வங்கித் தலைவரான மார்க் கார்னி வெற்றி பெற்றதாக அறிவித்துள்ளார்.

- 2008ம் ஆண்டு முதல் 2013ம் ஆண்டு வரை கனடா வங்கியின் 8வது கவர்னராக மார்க் கார்னி பணியாற்றி உள்ளார்.
- லிபரல் கட்சியின் தலைமைப் பதவிக்கான போட்டியில் மார்க் கார்னி 1,31,674 ஓட்டுக்களை பெற்று வெற்றி பெற்றார்.

இது குறித்து மார்க் கார்னி கூறியதாவது: அமெரிக்கா, கனடா அல்ல. கனடா ஒருபோதும், ஒருபோதும் அமெரிக்காவின் ஒரு பகுதியாக இருக்காது. அமெரிக்கா நம் இயற்கை வளங்களையும், குடிநீரையும், நிலத்தையும், கூடவே முழு கனடா நாட்டையும் அடக்கி ஆள விரும்புகிறது.

இது அவர்களுடைய நடவடிக்கையை பார்க்கும்போதே நமக்கு தெரிகிறது. அமெரிக்க அதிபர் டிரம்ப், கனடாவின் தொழிலாளர்களையும், குடும்பங்களையும், வணிகங்களையும் பாதிக்க வைக்கும் விஷயங்களை செய்து வருகிறார். இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

# வெள்ளை மாளிகை அருகே ஆயுதங்களுடன் சுற்றித்திரிந்தவர் சுட்டுப்பிடிப்பு

அமெரிக்க அதிபர் டிரம்ப் வசிக்கும் வெள்ளை மாளிகை அருகே ஆயுதங்களுடன் சுற்றித்திரிந்த நபர் ஒருவரை உளவுத்துறையினர் சுட்டுப் பிடித்தனர். வெள்ளை மாளிகையின் மேற்கு பகுதியில் உள்ள அலுவலகம் அருகே, இண்டியானாவில் இருந்து ஆயுதங்களுடன் வந்த ஒருவர் சுற்றித்திரிவதாக உளவுத்துறையினருக்கு தகவல் கொடுத்தனர்.

இதனையடுத்து அந்த பகுதியில் உளவுத்துறையினர் சோதனை நடத்தினர். அந்த பகுதியில் வாகனத்தை நிறுத்திய ஒருவரின் அடையாளம், போலீசார் தெரிவித்ததுடன் ஒத்துப்போனது. அந்த நபரிடம் ஆயுதங்களும் இருந்துள்ளன. இது குறித்து விசாரணையின் போது, அந்த நபருக்கும், உளவுத்துறையினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. அந்த நபரை உளவுத்துறையினர் சுட்டுப்பிடித்தனர். காயமடைந்த அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளார். அவர் யார் என்பது குறித்து விசாரணை நடந்து வருகிறது. .(ஐ)

# அமெரிக்காவில் ஹிந்து கோவில் மீது தாக்குதல்

அமெரிக்காவில், சுவாமி நாராயணன் கோவிலில் காலிஸ்தான் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில், கோவில் சேதமடைந்தது.

அமெரிக்காவில் வசிக்கும் இந்தியர்கள் பல்வேறு இடங்களில் கோவில்களை அமைத்து வழிபட்டு வருகின்றனர். கலிபோர்னியா மாகாணத்தின் சான் பெர்னார்டினோ கவுன்டியில் உள்ள சினோ ஹில்ஸ் என்ற இடத்தில் மிக பிரமாண்டமான சுவாமி நாராயணன் கோவில் உள்ளது. இந்த கோவிலை மர்ம நபர்கள் நேற்று முன்தினம் இரவு சேதப்படுத்தினர்.

கோவில் சேதப்படுத்தப்பட்ட தகவலை, கோவிலை நிர்வகிக்கும் பி.ஏ.பி.எஸ்., என்ற ஹிந்து அமைப்பினர் தெரிவித்தனர். மேலும், கடந்த செப்டம்பரில் கலிபோர்னியாவின் சாக்ரமென்டோ பகுதியில் ஹிந்து கோவில் தாக்குதலுக்குள்ளானதையும், அதைத் தொடர்ந்து, நியூயார்க்கின் மெல்வில்லேயில் உள்ள சுவாமி நாராயணன் கோவில் தாக்கப்பட்டதையும் சுட்டிக்காட்டினர். இதுவரை, 10 ஹிந்து கோவில்கள் மீது அமெரிக்காவில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

கலிபோர்னியா ஹிந்து கோவிலில் நாசவேலை இந்தியா கடும் கண்டனம்

கோவில் மீதான தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ள அமெரிக்கவாழ் ஹிந்துக்களுக்கான அறக்கட்டளை என்ற அமைப்பு, 'தாக்குதல் தொடர்பாக, அமெரிக்க புலனாய்வு அமைப்பான எப்.பி.ஐ., வாயிலாக விசாரணை நடத்த வேண்டும்' என, கோரிக்கை விடுத்துள்ளது. அமெரிக்காவில் உள்ள மற்றொரு ஹிந்து அமைப்பான, வட அமெரிக்க ஹிந்து கூட்டமைப்பினர், 'இந்திய எதிர்ப்பு மனநிலை கொண்ட அமைப்பினரின் செயல் இது.

'லாஸ் ஏஞ்சல்ஸில், 'காலிஸ்தான் ஓட்டெடுப்பு' நடத்துவதாக காலிஸ்தான் பயங்கரவாதிகள் கூறிக்கொண்டு இருக்கும் நாள் நெருங்கி வருவதால், இதுபோன்ற தாக்குதல் நடைபெறுகிறது' என்றனர்.

## தேசபந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவர் மொஹமட் லாபர் தாஹிர் மற்றும் சரத் திசாநாயக்க ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற ஆயம் முன்னிலையில் இன்று பரிசீலனைக்கு அழைக்கப்பட்டது.

பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை விடுத்த பின்னர், மனுவை எதிர்வரும் 12 ஆம் திகதி பரிசீலனைக்கு அழைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசா நடைமுறைகைள மீறிய குற்றச்சாட்டில் இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டனர்.

இந்தக் குழுவினர் குடிவரவு - குடியகல்வுத்துறை புலனாய்வாளர்களால் கண்டறியப்பட்டனர். இதையடுத்து நேற்றுமுன்தினம் இரண்டு மதபோதகர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைகளின் பின்னர் கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாக நாடு கடத்தப்பட்டனர்.

இதேவேளை, இந்தியாவில் சுற்றுலா விசாவில் வந்து, யாழ்ப்பணத்தில் சிறப வேலைகளில் ஈடுபட்டிருந்த 8 பேர் மற்றும் யாழில் உள்ள உணவகங்களில் பணிபுரிந்த ஐவர் என மேலும் 13 இந்தியப் பிரஜைகள் யாழ்ப்பாணம் விமான நிலையம் ஊடாக சென்னைக்கு நாடு கடத்தப்பட்டனர்.

## யாழில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் கோரி வந்தனர்.

இந்நிலையில், குறித்த காணொளியில் காணப்பட்ட குடும்பத் தினர் பண்டத்தரிப்பு பகுதியில் வசித்து

வரும் நிலையில், அவர்களுடன் சமரசம் பேச மேற்படி இளைஞர் தனது சகாக்களுடன் நேற்று சென்ற சமயம், அயலவர்கள் பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்துச் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் யூடியூப்பரையும் அவருடன் சென்ற மூவரையும் பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர்.

விசாரணைகளின் பின்னர் நால்வரையும் இன்று திங்கட்கிழமை மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்திய வேளை அவர்கள் அனைவரையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட மன்று, குறித்த யூடியூபருடன் இணைந்து வீடுகளுக்குள் அத்துமீறி நுழைந்து காணொளி எடுப்போர் மற்றும் அவருக்கு உடந்தையாகச் செயற்பட்ட நபர்கள் குறித்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து, அவர்களையும் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு மன்று கட்டளையிட்டுள்ளது.

## ஜனநாயக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி அங்கத்துவக் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடவுள்ளது." - என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோவின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இன்று திங்கட்கிழமை மதியம் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் உள்ள அனைத்து சபைகளிலும் போட்டியிடவுள்ளது.

யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சரவணபவன் மற்றும் சந்திரகுமார் ஆகியோரின் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடவுள்ளோம். ஏனைய இடங்களில் ஜனநாயகத் தமிழ்க் தேசியக் கூட்டணி சார்பாக அதன் அங்கத்துவக் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடவுள்ளோம். அதற்கான கட்டுப் பணத்தைச் செலுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். ஒட்டுமொத்தமாக ஜனநாயகத் தமிழ்க் தேசியக் கூட்டணி அனைத்து சபைகளிலும் போட்டியிடும்.

மன்னார் பிரதேச சபைக்கான தேர்தல் தொடர்பாக நீதிமன்றத்தில் இடம்பெறும் வழக்கு விசாரணை மீளப் பெற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில் அதற்கான தேர்தல் அறிவிக்கப்படும் சந்தர்ப்பம் உள்ளது. எனவே, மன்னார் பிரதேச சபை தேர்தலில் போட்டியிட நாங்கள் தயாராகவுள்ளோம். ஜனநாகயத் தமிழ் தேசியக் கூட்டணியின் அங்கத்துவக் கட்சிகள் மாத்திரமே ஒரு கூட்டாக இந்தத் தேர்தலில் போட்டியிடவுள்ளது.

அண்மையில் 9 கட்சிகள் இணைந்து ஒரு கலந்துரையாடல் மத்திரமே முன்னெடுக்கப்பட்டது. எனினும், 9 கட்சிகளும் இணைந்துள்ளோம் என்று தெரிவிக்கவில்லை. 9 கட்சிகளும் இணைந்து கலந்துரையாடலை மாத்திரமே முன்னெடுத்தோம்.

இந்தக் கூட்டு யாழ்ப்பாணத்தில் மாத்திரமே அமைய இருக்கின்றது. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனின் கட்சி தனிதது் போட்டியிடவுள்ளது. ஐங்கரநேசனின் கட்சி தனித்துப் போட்டியிடுகின்றதா? இல்லையா? என்று தெரியவில்லை. எனினும், இந்த அணியில் இருந்து விலகியுள்ளதாக ஐங்கரநேசன் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதியில் மாத்திரம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சரவணபவன் மற்றும் சந்திரகுமார் ஆகியோரின் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடவுள்ளோம். ஏனைய இடங்களில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி அங்கத்துவக் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடும்." - என்றார்.

## வடமராட்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திடீர் சுகவீனமுற்று மயங்கி வீழ்ந்த நிலையில், அவரை வீட்டார் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சேர்த்தனர். எனினும், வைத்தியசாலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைத் தமிழரசுக் கட்சி எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கொழும்பில் போட்டியிடுவது என்று முன்னர் தீர்மானித்திருந்த போதிலும் வவுனியாவில் நேற்று நடைபெற்ற கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் கொழும்பில் களமிறங்குவதில்லை என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையிலேயே தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கைத் தமிழரசுக் கட்சி கொழும்பில் போட்டியிட்டால் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை.

இலங்கையில் கட்சிகள் என்ற வகையில் எங்கு வேண்டுமானாலும் தேர்தலில் போட்டியிடலாம், போட்டியிடாமல் தவிர்த்துக் கொள்ளலாம். அந்தவகையில் தமிழரசுக் கட்சியினர் கொழும்பில் போட்டியிட்டால் அது அவர்களின் ஜனநாயக உரிமை. அவர்கள் எங்களுடைய நண்பர்கள். அவர்கள் கொழும்பில் போட்டியிட வேண்டும். அவர்களை நான் வரவேற்பேன் ." - என்றார்.

# தாயுடன் உறங்கிய குழந்தை சடலமாக மீட்பு

மட்டக்களப்பு, மார்ச் 10

மட்டக்களப்பு, நாவற்காடு கிராமத்தில் வீட்டில் தாயுடன் உறக்கத்தில் இருந்த குழந்தை இறந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது. வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள நாவற்காடு, இறக்கத்துமுனை பகுதியில் பிறந்து மூன்று மாதங்களான குழந்தை நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு தாயாரிடம் பால் அருந்தியுள்ளது.

அதன்பின்னர் குழந்தையும் தாயும் தமது வீட்டில் உறக்கியுள்ளனர். மறுநாள் இன்று திங்கட்கிழமை அதிகாலை குழந்தைக்குப் பால் கொடுப்பதற்காக எழுப்பியபோது குழந்தை மூச்சு சுவாசம் இல்லாமல் இருந்துள்ளது. உடனடியாகக் குழந்தை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது. எனினும், குழந்தை முன்னரே இறந்து விட்டது என்று வைத்தியர் தெரிவித்துள்ளார்.

வவுணதீவு பொலிஸாரின் வேண்டுகோளுக்கு அமைய மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சம்பவ இடத்துக்குச் சென்று மரண விசாரணைகளை மேற்கொண்டு, சடலத்தைப் பிரேத பரிசோதனைக்குப் பணித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வவுணதீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வீதியில் இருந்து ஆண் குழந்தை உயிருடன் மீட்பு!

கொழும்பு, மார்ச் 10

அம்பலாங்கொடை, மாதம்பே, தேவகொட பிரதேசத்தில் வீதியில் கைவிடப்பட்ட நிலையில் இருந்த குழந்தை ஒன்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் இன்று திங்கட்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

இரண்டு மாத ஆண் குழந்தை ஒன்றே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தேவகொட பிரதேசத்தில் வீதியில் கைவிடப்பட்ட நிலையில் குழந்தை ஒன்று இருக்கின்றது என்று அம்பலாங்கொடை பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் குழந்தையை மீட்டு, உடனடியாக பலப்பிட்டி வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

மேலும், குழந்தை நலமாக இருக்கின்றது என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் அம்பலாங்கொடை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 2026 இல் புதிய கல்வி மறுசீரமைப்பு!

2026 ஆம் ஆண்டில் புதிய கல்வி மறுசீரமைப்பு தொடங்கப்படும் என்றும், இதற்கான தயாரிப்பு செயல்முறை 2025ஆம் ஆண்டில் நடைபெறும் என்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி தொடர்பான அமைச்சர் ஆலோசனைக் குழு சமீபத்தில் நாடாளுமன்றத்தில் கூடிய போது பிரதமர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

புதிய கல்வி மறுசீரமைப்பு ஐந்து பிரதான தூண்களின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட இருப்பதாகக் குழுவின் தலைவர் குறிப்பிட்டார்.

அதன்படி புதிய பாடநெறியை அறிமுகப்படுத்தல், மனிதவளத்தை மேம்படுத்தல், உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், பொது மக்களை விழிப்புணர்வூட்டல் மற்றும் உரிய மதிப்பாய்வு மேற்கொள்ளல் போன்ற பிரதான விடயங்களின் கீழ் இந்தக் கல்வி மறுசீரமைப்பு தரம் ஒன்று முதல் தரம் ஆறு வரையான மாணவர்களுக்காக 2026ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கல்வி, உயர்கல்வி மற்றம் தொழிற் கல்வி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவுடன் இணைந்ததாக ஆறு உப குழுக்களை அமைப்பது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

அதற்கமைய கல்வி மறுசீரமைப்பு, பாடசாலைகளில் காணப்படும் பௌதீக மற்றும் மனித வளக் குறைபாடுகள், பாடசாலைகளில் இடைத்தர வகுப்புக்களுக்கு மாணவர்களை அனுமதித்தல், கல்விச் சபையை நிறுவுதல், உயர் கல்விப் பிரிவு, திறன்-கல்விப் பிரிவு ஆகிய வற்றின் கீழ் ஆலோசனைக் குழுவுடன் இணைந்ததாக ஆறு உப குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

அத்துடன், குறித்த அமைச்சுத் தொடர்பில் தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் காணப்படும் விடயங்கள் பற்றியும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

# உடைக்குள் சிறைவைக்கப்பட்ட...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

சுவரடைக்கப்பட்டு, கூரைகள் வர்க்கத்தால் வேயப்பட்டு, பெண்களைச் சுரண்டிப்பிழியும் கூடாரங்களென்பதை உணர்ந்து சீர்திருத்திக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குடும்பத்தையே சிதைத்துத்தான் இங்கு சமத் துவத்தை ஏற்படுத்த முடியுமென்ற நிலை வலுவாகும்.

வீடுகளுக்குள்அறைக்கதவுகளையும், சன்னல்களையும் மூடாமல் ஏதுவான உடைகளை பெண்கள் அணிவது கூட சிக்கலான காரியமாக உள்ளது. பெண்கள் குளிப்பதை திருட்டுத்தனமாக வீடியோவாக பதிவு செய்து மிரட்டும் ஆண்கள் சூழ்ந்த சமூகத்தில் பெண்களின் உடல்கள் உடைகளால் சிறைவைக்கப்படுகின்றன.

பெண்களின் சுதந்திரமான உடைத்தேர்வுகள் ஆண்களின் காமத்தைத் தூண்டக்கூடியது என்று கூறும் ஆண்களைப் புறக்கணிக்க வேண்டும். இது போன்ற ஆதிக்கக் கருத்துக்களை வெளிப்படுத்துகின்ற கலை இலக்கியப் படைப்புகளுக்கெதிரான விமர்சனங்கள் ஏற்பட வேண்டும்.

பெண்ணுடல் ஆபசமானதோ கீழானதோ அல்ல் பெண்ணின் நிர்வாணம் அவமானத்துக்குரியதும் அல்ல.

நிர்வாணப் புகைப்படங்களை வைத்து மிரட்டும் ஆண்களது அத்துமீறல்களுக்கான தீர்வை, பெண்களின் ஆடை சுதந்திரத்தில் தேடாமல், ஆணாதிக்க உளவியலை சிதைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி6.10.03.2025 இல் வெளியிடப்பெற்றது.